**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**C.C.No. 81 of 2023**

அரசுதரப்பு **3 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அமுதா | வயது | : 53 |
| **கணவர்** பெயர் | : பாலசுப்ரமணியன் | தொழில் | : இல்லத்தரசி |
| கிராமம் | : கோண்டுர் | ஜாதி | :-------- |
| தாலுக்கா | : கடலூர் | சமயம் | : |
| மாவட்டம் | : கடலூர் | மொபைல் | : 9944113669 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 15.04.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**எதிரிகள் **2, 4,** முதல் **9** எதிரிகள் முன்னிலை**. 3**வது எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. 1** முதல் **3, 5** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலை **)**

முதல் விசாரணை:

நான் கோண்டுரில் வசித்து வருகிறேன். இறந்த மாரிமுத்து என்பவரை தெரியும். எதிரி தமிழ்செல்வியை தெரியும். எதிரி ஹேமலதாவை தெரியும். எனது தோழி வத்சலா பண்ருட்டியை சேர்ந்தவர் மாரிமுத்துவிடம் சீட்டு கட்டி கொண்டிருந்தார். வத்சலா மாரிமுத்து மற்றும் தமிழ்செல்வியை அறிமுகப்படுத்தி வைத்தார். சீட்டு கட்டினால் கசரு நன்றாக வரும் என்று கூறியதால் நான் சீட்டு கட்டினேன். நான் ரூ.5 லட்சம் சீட்டு 20 மாதங்கள் கொண்டதில் 17 சீட்டு

கட்டினேன். மொத்தம் ரூ.2,19, 400/- கட்டினேன். ஐந்து லட்சம் சீட்டு 01.01.2020 முதல் 17 மாதங்கள் கட்டினேன். ஐந்து லட்சம் சீட்டு கட்டியவுடன் ஒரு லட்சம் சீட்டு ஒன்று கட்டினேன். 20 மாதங்கள் கொண்ட அந்த சீட்டில் 17 மாதங்கள் மொத்தம் ரூ.54,600/- கட்டினேன். மொத்தம் ரூ.2,73,600/- கட்டினேன். நான் கட்டிய சீட்டு தொகை திரும்ப கிடைக்கவில்லை. மாரிமுத்து இறந்தவுடன் தமிழ்செல்வியிடம் சென்று கேட்டேன். கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார். சீட்டு தொகையை என் கணவரின் SBI வங்கி கணக்கிலிருந்து மாரிமுத்துவின் ICICI வங்கி கணக்கிற்கு செலுத்தி கட்டினேன். அது தவிர நேரடியாக மாரிமுத்துவிடமும் கொடுப்பேன். அவர்கள் குடும்பம் தமிழ்செல்வி உட்பட அனைவரும் பணம் கொடுக்கும்போது இருப்பார்கள். பணத்தை திருப்பி தராததால் பொருளாதார குற்ற பிரிவில் புகார் கொடுத்தேன். புகாருடன் என் கணவரின் வங்கி கணக்கு பட்டியல் கொடுத்தேன். நான் கொடுத்த SBI வங்கி கணக்கு எண் 30341073364 01.04.2021 முதல் 31.05.2021 கணக்கு பட்டியல் **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்பட்டது. பொருளாதார குற்ற பிரிவு போலிசார்கள் விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் ஐந்து லட்ச ரூபாய் சீட்டில் சேர்ந்து ஒரு வாரத்தில் ஒரு லட்ச ரூபாய் சீட்டு சேர்ந்தேன். அதே மாதத்தில் சேர்ந்தேன். போலிஸ் விசாரிக்கும் போது மேற்படி விவரத்தை கூறினேனா என்றால் சரியாக நினைவில்லை. என் கணவரின் வங்கி கணக்கிலிருந்து மாரிமுத்து வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியதாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் எந்த சீட்டிற்கு பணம் அனுப்பப்பட்டது என்றால் இரண்டு சீட்டிற்கும் சேர்த்து அனுப்பப்பட்டது. ஐந்து லட்சம் சீட்டிற்கு மாதம் எவ்வளவு கட்டுவேன் என்றால் கசுரு போக கட்டுவேன். கசுரு போக சுமார் எவ்வளவு கட்டுவேன் என்றால் என் கணவர் தான் கட்டுவார் எனக்கு தெரியாது. ஒரு லட்ச ரூபாய் சீட்டிற்கு மாதம் எவ்வளவு கட்டுவேன் என்றால் கசுரு போக மாதம் ரூ.2,300/-, ரூ.2,400/- போல் வரும் கட்டுவேன். வத்சலாவை எனக்கு 6ம் வகுப்பு முதல் பழக்கம். வத்சலா தான் மாரிமுத்து சீட்டு பிடிப்பது பற்றி என்னிடம் கூறினார். என்னுடன் யார் யார் சீட்டு கட்டினார்கள் என்றால் எனக்கு வத்சலாவை தவிர வேறு யார் பெயரும் தெரியாது. ஒவ்வொரு என் கணவர் வங்கி கணக்கிலிருந்து மாரிமுத்து வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியதாக நான் கூறியிருந்தால் அது சரியா என்றால் ஒவ்வொரு மாதமும் போகவில்லை, எல்லா மாதமும் வங்கி மூலம் அனுப்பவில்லை. நேரடியாகவும் கொடுத்தேன். நேரடியாக நான் பணம் கொண்டுபோய் கொடுக்கும்போது

தமிழ்செல்வியும் அவர் குடும்பத்தாரும் அங்கு இருப்பார்கள் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன். வத்சலா, மாரிமுத்து என்னென்ன தொகைக்கு சீட்டு பிடிக்கிறார் என்று விவரம் கூறிய பிறகு தான் சீட்டு சேர்ந்தேன். எதிரிகள் தமிழ்செல்வி, ஹேமலதா ஆகியோருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மாரிமுத்து இறந்துவிட்டதால் எனக்கு பணம் கிடைக்காது என்பதால் 2, 3 எதிரிகளை வேண்டுமென்றே வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கும் மாரிமுத்துவிற்கும் தான் பரிவர்த்தனை என்றும் எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>**5-**ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:** இல்லை.

<u>**4, 6** முதல் **9** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:** இல்லை.